இனிமையான குழந்தைகளே ! 21 பிறவிகளுக்கான புண்ணியக் கணக்கை சேமிக்க வேண்டும், யோக பலத்தினாலே பாவங்களின் கணக்கை சாம்பலாக்க வேண்டும். எனவே உள் நோக்கி முகமானவர் (அந்தர்முகி) ஆகுங்கள்.

கேள்வி: எந்த ஸ்ரீமத்தை பாலனை செய்வதால் சப்தத்திற்கு அப்பாற்பட்டு செல்வதற்கான புருஷார்த்தம் (முயற்சி) சுலபமானதாக ஆகி விடும்?

பதில்: குழந்தைகளே! உள்நோக்கு முகமானவராக ஆகி விடுங்கள். வெளியில் எதுவும் பேசாதீர்கள் என்று ஸ்ரீமத் கூறுகிறது. இந்த ஸ்ரீமத்தை பாலனை செய்தீர்கள் என்றால் சுலப மாகவே சப்தத்திற்கு அப்பாற்பட்டு உங்களால் செல்ல முடியும். எந்த அளவு நினைவு செய்வீர்களோ, சுய தரிசன சக்கரத்தைச் சுற்றுவீர்களோ அந்த அளவு சம்பாத்தியம் சேமிப்பு ஆகிக் கொண்டே போகும். நினைவிற்கு அமிருத வேளையின் நேரம் மிகவும் நல்ல நேரம் ஆகும். அந்த நேரத்தில் எழுந்திருந்து உள்நோக்கு முகமானவர் ஆகி ஆத்ம சொரூபத் தில் நிலைத்திருந்து அமர்ந்து விடுங்கள்.

பாடல்: நீங்கள் இரவெல்லாம் உறங்கிக் கழித்தீர்கள்.....

ஓம் சாந்தி! உள்நோக்கு முகமாக ஆகி விடுங்கள், வெளியில் எதுவும் பேசாதீர்கள். தனது ஆத்ம சொரூபத்தில் நிலைத்திருந்து அமருங்கள் என்று இதை யார் புரிய வைக்கிறார்? தந்தை குழந்தைகளுக்குக் கூறுகிறார் - வாயால் எதுவுமே பேசாதீர்கள். இராம், இராம் என்றோ நிறையவே கூறி வந்துள்ளீர்கள். ஆனால் அவ்வாறு கூறுவதால் கூட மனிதர்கள் பாவனமாக ஆக முடியாது. பதீத பாவன தந்தையின் ஸ்ரீமத்படி நடக்கும் பொழுது தான் மனிதர்கள் பதீத நிலையிலிருந்து பாவனமாக ஆக முடியும். பதீத பாவனர் என்று கூறும் பொழுது தந்தை நினைவிற்கு வருகிறார். நீங்கள் உண்மையில் பதீதமாக இருந்தீர்கள் அல்லவா? என்று தந்தை கூறுகிறார். இப்பொழுது நீங்கள் பாவனமாக ஆகிக் கொண்டிருக் கிறீர்கள். சத்யுகத்தில் யாரும் பதீதமாக இருப்பதில்லை. 5 ஆயிரம் வருடங்களுக்கு முன்பு பாரதம் பாவனமாக இருக்கும் பொழுது ஒரே ஒரு தர்மம் இருந்தது. தந்தையோ சுகத் தினுடைய படைப்பைத் தான் படைப்பார் அல்லவா? பாரதம் சுகதாமமாக இருந்தது. இலட்சுமி நாராயணர், இராமர் சீதை ஆகியோரின் கோவில்கள் சத்யுக திரேதாவின் அடையாளம் ஆகும். சத்யுகத்தில் உண்மையில் இலட்சுமி நாராயணரின் பரம்பரை இருந்தது. இதே பாரதத்தில் சூரிய வம்சம், சந்திர வம்சத்தின் இராஜ்யம் நடந்து கொண்டு இருந்தது. அது இப்பொழுது மீண்டும் ஸ்தாபனை ஆகிக்கொண்டிருக்கிறது. இதற்கு உலக சரித்திரம் பூகோளம் என்று கூறப்படுகிறது. இதை மனிதர்கள் தானே அறிந்து கொள்வார்கள்? மனிதர்கள் அறியவில்லை என்றால் மிருகத்தை விட கேவலம் என்று கூறப் படுகிறது. தந்தையை அறிந்து கொள்வதற்காக எவ்வளவு அலை மோதுகிறார்கள். ஆனால் அறிய முடியாமல் உள்ளார்கள். நீங்கள் தந்தையின் குழந்தைகளாக ஆகி உள்ளீர்கள். எனவே தந்தை தனது அறிமுகத்தை அளிக்கிறார். முதலில் அறிமுகம் இருக்கவில்லை. பின் அதனுடைய விளைவு என்னவாக ஆகியது? அனாதை, நாஸ்திகர், ஏழையாக ஆகி விடுகிறீர்கள். இப்பொழுது நீங்கள் தந்தையினுடையவர் ஆகி உள்ளீர்கள். தந்தையிடமிருந்து ஆஸ்தியைப் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். மிக உயர்ந்த ஆஸ்தி ஆகும். 21 பிறவிகளுக்கு சொர்க்கத்தின் இராஜதானி கிடைக்கிறது. இது குறைவான

விஷயமா என்ன? இலட்சுமி நாராயணர் ஆட்சி புரிந்து 5 ஆயிரம் வருடங்கள் ஆகி விட்டது. மறுபடியும் சரித்திரம் திரும்ப (ரிபீட்) நடைபெறு கிறது.

"என்னுடைய ஸ்ரீமத் படி நடவுங்கள்". உள்நோக்குமுகமானவர் ஆகுங்கள், வெளி முகமானவர் ஆகாதீர்கள் என்று தந்தை புரிய வைக்கிறார். இப்பொழுது இந்த நேரத்தில் காரிருட்டாக உள்ளது. இது இரவு என்று கூறப்படுகிறது. இப்பொழுது பகல் வரப் போகிறது. கலியுகக் கடைசிக்கு காரிருட்டு என்றும் சத்யுக ஆரம்பத்திற்கு பட்டப் பகல் என்றும் கூறப்படுகிறது. எல்லா மனிதர்களும் பதீதமாக ஆகி விடும் பொழுது சங்கமத்தில் தான் நான் வருகிறேன் என்று தந்தை கூறுகிறார். இப்பொழுது குழந்தைகளாகிய உங்களுக்கு சதா சுகத்தின் ஆஸ்தியை அளிக்க வந்துள்ளேன். விநாசம் எதிரிலேயே உள்ளது. நிறைய முடிந்து விட்டது. இன்னும் கொஞ்சம் தான் உள்ளது......எனவே இப்பொழுது சீக்கிரம் சீக்கிரமாக புருஷார்த்தம் (முயற்சி) செய்து எல்லோரும் எப்படி ஆஸ்தி எடுத்துக் கொண்டிருக் கிறார்களோ அதே போல எல்லை யில்லாத தந்தையிடமிருந்து ஆஸ்தியைப் பெறுங்கள். எல்லோரும் புருஷார்த்திகளாக (முயற்சி செய்பவர்களாக) உள்ளார்கள். இப்பொழுது அனைவரும் "ஸ்வீட் ஹோம்", சப்தத்திற்கு அப்பாற்பட்டு செல்ல வேண்டும். அது ஆத்மாக் களாகிய நம்முடைய வீடு நிர்வாண தாமம் ஆகும். தாமத்தில் (வீடு) யாரோ ஒருவர் மட்டும் இருக்க மாட்டார்கள். எத்தனை ஜீவ ஆத்மாக் கள் இருக்கிறார்களோ அவர்கள் எல்லோருமே சரீரத்தை விட்டு விட்டு தங்களுடைய வீட்டிற்கு பாபாவிடம் சென்று விடுவார்கள். அது நிராகாரி விருட்சம் ஆகும். எப்படி படத்தில் கூட விருட்சம் காண்பிக்கப்படுகிறது. அது ஆத்மாக்களாகிய நம்முடைய வீடு சாந்தி தாமம் ஆகும். பிறகு நாம் சுக தாமத்தில் வருவோம். இப்பொழுது 84 பிறவிகளின் சக்கரம் முடிவடைகிறது. கலியுகத்திற்கு பிறகு சத்யுகம் அவசியம் வரும் அல்லவா? துவாபரத்திற்கு பிறகு கலியுகம் அவசியம் வரும். நான் கல்ப கல்பமாக கல்பத்தின் சங்கம யுகத்தில் வருகிறேன் என்று தந்தை கூறுகிறார். பழைய உலகத்தை விநாசம் செய்விக்கிறேன். புது உலகத்தின் ஸ்தாபனை ஆகி விடும் வரை இந்த பழைய உலகத்தில் இருக்க வேண்டி இருக்கும். புதிய வீடு தயாராகும் வரை பழைய வீட்டில் அமர்ந்து கொண்டு இருப்பார்கள் அல்லவா? புதியது கட்டிய பிறகு உடன் பழையது இடிக்கப்பட்டு விடும். இதுவும் பழைய பொருள் ஆகும் அல்லவா? இதனுடைய விநாசத்திற் காகத் தான் இந்த மகா பாரதப் போர் உள்ளது. தந்தை வந்து குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார். ஆத்மா தான் புரிந்து கொள்கிறார். உலகியல் ஞானம் கூட ஆத்மா தான் கற்கிறது அல்லவா? நான் முதல்வர் ஆவேன், சர்ஜன் ஆவேன் என்று ஆத்மா கூறுகிறது. ஆத்மாவின் ஞானம் இல்லாத காரணத்தினால் தேக அபிமானியாக ஆகி விடுகிறார்கள். ஆத்மா தான் சம்ஸ்காரத்தை எடுத்து செல்கிறது. சிவ பாபா ஆத்மாக்களாகிய நமக்குப் புரிய வைக்கிறார் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துள்ளீர்கள். நான் ஆத்மா இந்தப் பழைய சரீரத்தை விட்டு விட்டு போய் புதிய சரீரத்தை எடுப்பேன். இப்பொழுது நான் கருமையாக (ஷியாம்) உள்ளேன். பின் அழகாக (சுந்தர்) ஆகி விடுவேன். தூய்மையிலிருந்து கருமையாக ஆகிறோம். 84 பிறவிகள் பிடிக்கிறது. பிறகு பாபா காம சிதையிலிருந்து இறக்கி, ஞான சிதையில் அமர்த்தி தங்க யுகத்தின் அதிபதியாக ஆக்கி விடுகிறார். எல்லை யில்லாத தந்தை அவசியம் எல்லையில்லாத ஆஸ்தியை அளிப்பார் அல்லவா? தந்தையோ உயர்ந்ததிலும் உயர்ந்தவர் ஆவார். குழந்தைகளுக்காக வைகுண்டத்தின் பரிசு

எடுத்து வந்துள்ளேன் என்கிறார். உள்ளங்கையில் சொர்க்கத்தை ஏந்தி வந்துள்ளேன். ஒரு நொடியில் நீங்கள் சாட்சாத்காரம் செய்து கொண்டு விடுகிறீர்கள். எவ்வளவு ஏராளமான பிரம்மா குமார் குமாரிகள் உள்ளார்கள். அவசியம் பிரம்மாவின் குழந்தைகள் ஆவோம் மற்றும் சிவபாபாவின் பேரன்கள் ஆவோம். நாங்கள் சிவபாபாவிடமிருந்து ஆஸ்தி எடுக் கிறோம் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அவரே அனைவருக்கும் சத்கதி அளிக்கும் வள்ளல் ஆவார். இராஜயோகம் கற்பிக்கிறார். நிராகார மானவர் எப்படி கற்பிக்க முடியும்? எனவே உறுப்புக்கள் மூலம் படிப்பிக்கிறார். சிருஷ்டிச் சக்கரத்தின் ஞானம் அளிக்கிறார். அவரை பரம ஆத்மா, சுப்ரீம் ஸோல் என்று கூறுகிறார்கள். அவருக்குத் தான் முழு மகிமையும் உள்ளது. ஞானக் கடல், பதீத பாவனர் அவர் ஆவார். எனவே அவசியம் வர வேண்டி உள்ளது. உங்களைக் கூட மாஸ்டர் சுப்ரீம் ஆக அல்லது பாவனமாக ஆக்குகிறார். அவர் எல்லையில்லாத தந்தை ஆவார். அவரை எல்லா பக்தர்களும் அழைக் கிறார்கள். அனைத்து பக்தர்களின் தந்தை அந்த பகவான் பரம பிதா பரமாத்மா ஆவார். அவரை சர்வவியாபி என்று கூறி விட்டால் பின் ஆஸ்தி எப்படிக் கிடைக்கும்? மனிதனை பகவான் என்று கூற முடியாது. கிருஷ்ணரைக் கூட தெய்வீக குணங்கள் உடைய மனிதர் என்று கூறப்படு கிறது. அவர் முதல் இளவரசர் ஆவார். எல்லோரும் அவரை ஊஞ்சலில் ஊஞ்சலாட்டு கிறார்கள். சிவபாபாவை ஒரு பொழுதும் ஊஞ்சலாட்டியிருக்க மாட்டார்கள். ஏனெனில் அவர் ஒரு பொழுதும் குழந்தையாக ஆவதே இல்லை. இதுவோ புரிய வைப்பதற்காக சாட்சாத்காரம் செய்விக்கிறார் - நான் உங்களின் குழந்தை ஆவேன். நீங்கள் என்னை உங்களுடைய வாரிசாக ஆக்கினீர்கள், சமர்ப்பணம் ஆனீர்கள் என்றால் நான் கூட சமர்ப்பணம் ஆவேன். சமர்ப்பணம் ஆகிறீர்கள் என்றால், நான் உங்களுடைய பாலகன் ஆகி விட்டேன் என்பதாகும்.

மனிதர்களிடம் எவ்வளவு குருட்டு நம்பிக்கை உள்ளது! அங்கங்கு தலை வணங்கிக் கொண்டே இருக்கிறார்கள். இதற்கு பொம்மைகளின் பூஜை என்று கூறப்படுகிறது. நவராத்திரியின் போது நிறைய பொம்மைகள் தயாரிப்பார்கள். அவர்களுடைய தொழில் (ஆக்யுபேஷன்) பற்றி யாருக்குமே தெரியாது. 4-6 புஜங்கள் உடைய தேவிகள் இருப்பார் களா என்ன? பின் வாள் ஆகியவை கொடுத்து விடுகிறார்கள். தேவதைகள் இம்சை செய்பவர்களாக இருப்பார்களா என்ன? சாஸ்திரவாதிகள் அவர்களையும் இம்சை செய்பவர் களாக ஆக்கி விட்டுள்ளார்கள். நேபாளத்தில் கூட காளியை பூஜிக்கிறார்கள். ஆனால் அது போல யாராவது இருப்பார்களா என்ன? மம்மா இது போல நாக்கை நீட்டி கொண்டி ருக்கும் காளியாக இருக்கிறாரா என்ன? மனிதனோ மனிதனாகத் தான் இருப்பான். பிரம்மா, விஷ்ணு, சங்கரன் சூட்சுமவதனவாசி ஆவார்கள். அவ்வளவே. வேறு எந்த பொருளுமே கிடையாது. பிறகு 8-10 புஜங்கள் உடையவர் கள் எங்கிருந்து வந்தார்கள்? இவையெல்லாம் பக்தி மார்க்கத்தின் அலங்காரங்கள் அமைக் கிறார்கள். பைசா சம்பாதிப்பதற்கு ஏதாவது வேண்டும் அல்லவா? பிறகு வித விதமான படங்களை தயாரித்து விடுகிறார்கள். அங்கேயே பார்த்தீர்கள் என்றால் அழகான கிருஷ்ணரின் கோவில், அங்கேயே கருநீலமான கிருஷ்ணரின் கோவில். காரணம் ஏதோ இருக்க வேண்டும் அல்லவா? எவ்வளவு குருட்டு நம்பிக்கை உள்ளது. இப்பொழுது பக்தி மார்க்கம் முடிந்து போய் ஞான மார்க்கம் வாழப் போகிறது. மற்றபடி நேரமோ குறைவாக உள்ளது. எல்லோரும் அவசியம் இறக்கவே வேண்டி உள்ளது. புத்திரர்கள், பேரன்கள் வாரிசாக ஆகப்

போவதில்லை. சங்கமத்தில் நாம் இராஜ்யத்திற்காக இந்த புருஷார்த்தம் செய்தோம் என்ற ஞானமே அங்கு உங்களுக்கு இருக்காது. அங்கோ பவித்திர சிருஷ்டி (தூய்மையான உலகம்) நடந்து வரும். உண்மையில் நாம் பாபாவின் இராஜ்யத்திற்கு உரிமையாளர் ஆவோம் என்பதை இங்கு நீங்கள் அறிந்துள்ளீர்கள். அங்கு நாம் என்னென்ன கர்மம் செய்திருந்தோம், எப்படி ஆனோம் என்பது தெரியாது - இவை எல்லாமே மறந்து போய் விடும். அங்கு பாவனமாக ஆவதற்காக குருவின் அவசியம் ஏற்படும் வகையில் பதீதமாக ஆவதே இல்லை. தந்தை கால்களைக் கழுவி குழந்தை களை சிம்மாசனத்தில் அமர்த்துகிறார். சத்கதிக்காக குரு வேண்டும். அங்கோ சத்கதி இருக்கவே இருக்கிறது. குருவின் அவசியமே கிடையாது. தங்களை ஆத்மா என்று உணருங்கள். தேக அபிமானத்தில் இருக்காதீர்கள் என்று தந்தை கூறுகிறார். நான் ஆத்மா இப்பொழுது டாக்டரின் ரூபத்தில் இருக்கிறேன். நான் ஆத்மா மேஜிஸ்டிரேட் ஆவேன். பிறகு இந்த சரீரம் விட்ட பிறகு என்ன ஆகப் போகிறேன் என்பது தெரியாது. நான் இந்த சரீரத்தின் மூலமாகப் படிக்கிறேன். ஆத்மா தான் இந்த உறுப்புக்கள் மூலமாக படிக்கிறது. ஆத்மா தான் கேட்கிறது. இவை புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும், கட்டுக் கதைகள் அல்ல.

இந்த முழு உலகம் சுடுகாடு ஆகப் போகிறது என்று தந்தை கூறுகிறார். இப்பொழுது விழித்தெழுங்கள். இல்லை என்றால் மூங்கில் காட்டிற்கு நெருப்பு பிடிக்கும் நேரத்தில் ஐயோ ! ஐயோ! என்பீர்கள். ஆனால் எதுவுமே செய்ய முடியாது. காலன் சாப்பிட்டு விடுவான். காப்பாற்று காப்பாற்று என்று கூறிக் கொண்டே இருந்து விடுவீர்கள். தண்டனைகளும் நிறைய வாங்கு வீர்கள். இப்பொழுது நாம் பாவங்களின் கணக்கை முடித்து விட்டு புண்ணியக் கணக்கை சேமிப்பு செய்ய வேண்டும். புதியதாக 21 பிறவி களுக்கு சேமிப்பு செய்ய வேண்டும். தந்தையை நினைவு செய்வதால் சேமிப்பு ஆகும். பழைய கணக்கு முடிந்து போய் விட வேண்டும். ஞானம் எவ்வளவு சுலபமானது! உங்களுக்கு தினமும் எவ்வளவு சம்பாத்தியம் ஆகிறது! யார் எந்த அளவு நினைவு செய்கிறார் களோ, சுயதரிசன சக்கரம் சுற்றுகிறார்களோ அந்த அளவு கணக்கற்ற, ஏராளமான சம்பாத்தியம் செய்கிறார்கள். அங்கு எதற்காவது கணக்கு இருக்குமா என்ன? இப்பொழுது குடிசைகளில் அமர்ந்துள்ளோம். பின் அரண்மனைகளில் அமருவோம். வித்தியாசம் இருக்கிறது அல்லவா? - குடிசைக்கும் மாளிகைக்கும். பிரம்மா மூலமாக புதிய உலகத்தின் ஸ்தாபனை ஆகி விடும் பொழுது பழைய உலகத்தின் விநாசம் ஆகி விடும். இப்போதைய விஷயம் ஆகும் அல்லவா! இராஜதானியின் ஸ்தாபனை ஆகிவிடும். பிறகு யார் எவ்வளவு புருஷார்த்தம் (முயற்சி) செய்தார்களோ அவ்வளவு தான் செய்வார்கள். பிறகு விநாசம் ஆகி விடும். எனவே இப்பொழுது கவனக்குறைவாக இருக்கக் கூடாது. அதிகாலை எழுந்து நினைவில் அமர்ந்து விட வேண்டும். எந்த அளவு நினைவின் சார்ட் வைப்பீர்களோ அவ்வளவு நல்லது. பின் அவ்வளவே உயர்ந்த பதவி அடைவீர்கள். சிவபாபாவின் கழுத்தின் மாலை ஆகிவிடுவீர்கள். மனம் என்ற கண்ணாடியில் பார்க்க வேண்டும் - நான் இலட்சுமி நாராயணரை வரன் முடிக்கத் தகுதி உடையவர் ஆகி உள்ளேனா? நாம் பாபா மம்மா போல சேவை செய்கிறோமா? விதவிதமான மலர்கள் உள்ளார்கள். இது தோட்டத் தின் எஜமானரான பாபாவின் மனிதப் பூந்தோட்டம் ஆகும். அதிலும் - பாருங்கள் குமாரகா பிரகாஷ்மணி) மனோகர் எவ்வளவு நல்ல நல்ல மலர்கள் ஆவார்கள். இவர் இரத்தின ஜோதி...... பாபா இந்தத் தோட்டத்தைப் பார்த்து, பின் அந்தத்

தோட்டத்திற்குச் சென்று மலர்களைப் பார்க்கிறார். தோட்டக் காரன் மலர்களை சோதிக்கிறார். எனவே குழந்தைகள் பின்பற்ற வேண்டும். முதல் நம்பர், இரண்டாம் நம்பர் மலர் யார் யார்? அவ்வாறு ஆக வேண்டும். 21 பிறவிகளுக்கு இராஜ்ய பதவி அடைவது குறைவான விஷயமா என்ன? ஏராளமான சுகம் உள்ளது. உலகின் அதிபதி ஆக வேண்டும். இது பள்ளிக் கூடம் ஆகும். அந்த உலகியல் படிப்பினுடன் கூடவே இந்த ஆன்மீகப் படிப்பையும் படியுங்கள். ஆசிரியர் களின் நடத்தை மிகவும் நல்லதாக இருக்கும். நேர்மையாக இருப்பார்கள். பள்ளியில் குருட்டு நம்பிக்கையின் விஷயம் இல்லை. அங்கு சட்டவியல், பொறியியல் படிக்கிறார்கள். இங்கு நீங்கள் இராஜாக்களுக்கெல்லாம் இராஜா ஆவதற்காகப் படிக்கிறீர்கள். சந்நியாசியோ இறைவன் சர்வவியாபி என்று கூறி விடுகிறார்கள். அவ்வளவே! விளையாட்டே முடிந்து விட்டது. எல்லையில்லாத தந்தை குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார்- குழந்தைகளே இந்தக் கடைசிப் பிறவியில் தூய்மையாக இருங்கள். நீங்கள் நிறைய சேவை செய்யமுடியும்.

அங்கு கூட கல்வித் துறை உள்ளது. இதுவும் இறை கல்வித் துறை ஆகும். குழந்தை களாகிய நீங்கள் இராஜ ரிஷி ஆவீர்கள். அவர்களோ வீடு வாசலை விட்டு விடுகிறார்கள். நீங்கள் வீட்டில் இருந்தபடியே முழு உலகத்தை தியாகம் செய்கிறீர்கள். உங்கள் புத்தியில் இப்பொழுது புதிய உலகம் உள்ளது. அதை தந்தை தான் அமைக்கிறார். எனவே தந்தை கூறுகிறார் நீங்கள் என்னை நினைவு செய்யுங்கள், இந்தப் பழைய உலகம் முடிந்து போய் விடும். இந்த ஆன்மீகக் கல்லூரி அல்லது மருத்துவமனை கூட மிகவும் பெரியது. அதன் மூலம் நீங்கள் எவர் ஹெல்தி, எவர் வெல்தி (என்றைக்குமே ஆரோக்கியம் செல்வம் உடையவராக) ஆகிறீர்கள். வீட்டுக்கு வீடு நீங்கள் இந்த மருத்துவமனை அல்லது கல்லூரியைத் திறக்கலாம். இதில் செலவு எதுவும் கிடையாது. 3 அடி நிலம் மட்டுமே வேண்டும். நல்லது.

தாய் தந்தை பாப்தாதாவின் இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்துக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்குஅன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. அதிகாலை எழுந்து நினைவில் அவசியம் அமர வேண்டும். இதில் கவனக் குறைவாக இருக்கக் கூடாது. புண்ணியக் கணக்கை சேமிக்க வேண்டும்.

2. (நோக்கம்) இலட்சியத்தை புத்தியில் இருத்தி நல்ல நடத்தையை தாரணை செய்ய வேண்டும். ஆன்மீகப் படிப்பை அவசியம் படிக்க வேண்டும். உள்நோக்கிமுகமாக ஆகி இருக்க வேண்டும்.

வரதானம் : பிராமண வாழ்க்கையின் விசேஷத்தன்மையை அறிந்து அதை காரியத்தில் ஈடுபடுத்தக் கூடிய அனைத்து விசேஷத்தன்மைகள் நிறைந்தவர் ஆகுக.

நாடகத்தின் நியமத்தின் அனுசாரம் சங்கமயுகத்தில் ஒவ்வொரு பிராமண ஆத்மா விற்கும் ஏதாவது ஏதாவது விசேஷத்தன்மை (சிறப்புத்தன்மை) கிடைத்துள்ளது. மாலையின் கடைசி மணியாக இருந்தாலும், அதிலும் ஏதாவது ஏதாவது விசேஷத்தன்மை உள்ளது.

ஆகையினால், பிராமணப் பிறவியினுடைய பாக்கியத்தின் விசேஷத்தன்மையை அறிந்து கொள்ளுங்கள் மற்றும் அதை காரியத்தில் பயன்படுத்துங்கள். ஒரு விசேஷத் தன்மையை காரியத்தில் ஈடுபடுத்தினீர்கள் என்றால் மற்ற விசேஷத்தன்மைகளும் தானாகவே வந்து கொண்டே இருக்கும். ஒன்றுக்கு முன்னால் புள்ளி சேர்ந்து சேர்ந்து அனைத்து விசேஷத் தன்மைகளில் நிறைந்தவராக ஆகிவிடுவீர்கள்.

சுலோகன்: மன்மனாபவ என்ற மந்திரத்தின் நினைவு சதா இருந்தது என்றால், மனம் அலைபாய்வது நின்றுவிடும்.